# 15

# அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்

**சிந்தியுங்கள்:**

- நோய் அகன்று, சுகம் கிடைக்க வேண்டும்.
- பிரச்சினை தீர்ந்து, நிம்மதியடைய வேண்டும்.
- கஷ்டம் விலகி, சுபீட்சம் கிடைக்க வேண்டும்.
- பாவம் நீங்கி, தூய்மை பெற வேண்டும்.
- ஆசைகளும் எதிர்பார்ப்புக்களும் குறையின்றி நிறைவேற வேண்டும்.





இவற்றுக்கெல்லாம் நாம் யாரை நாட வேண்டும்? எவர் பக்கம் திரும்ப வேண்டும்? யாரிடம் கேட்டுப் பெற வேண்டும்?

ஆம், அல்லாஹ் ஒருவனிடம் மட்டுமே கேட்க வேண்டும், அவனிடம் மட்டுமே எதிர்பார்க்க வேண்டும்.

‘‘மனிதர்களே! நீங்கள் அல்லாஹ்வின்பால் தேவையுடையவர்களாக இருக்கின்றீர்கள். அவன் எத்தகைய தேவையுமற்றவன். புகழுக்குரியவன்’’ (13 : 15) என்று அல்குர்ஆன் கூறுகிறது.



எனவே,

- அனைத்துக்கும் அவனையே அழைப்போம்.
- அவனிடமே உதவி தேடுவோம்.
- அவன் ஒருவனிடமே சகலவற்றையும் கேட்போம்.

அதுவே பிரார்த்தனையாகும்.

''நீங்கள் என்னையே அழையுங்கள். நான் உங்களுக்குப் பதில் அளிக்கின்றேன்'' (40:60).

''மேலும் (நபியே) என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால், (அதற்கு நீர் கூறுவீராக) நிச்சயமாக நான் (அவர்களுக்கு) மிகச் சமீபமாகவே இருக்கின்றேன். அழைப்பவரின் அழைப்புக்கு, -அவர் என்னை அழைத்தால் நான் பதிலளிப்பேன்'' (2:186)

''அல்லாஹ்வுடன் வேறு எந்த இறைவனையும் அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அதனால் நீர் வேதனை செய்யப்படுபவர்களில் (உள்ளவராக) ஆகிவிடுவீர்'' (26:213).

**பிரார்த்தனையின் சிறப்புக்களை அறிந்து வாழ்வில் அதனைக் கடைப்பிடிப்போம்.**

- பிரார்த்தனை, இறையச்சம் கொண்ட நல்லடியார்களின் பண்பாகும். ''அவர்கள் நற்செயல்களில் விரைகின்றனர். அச்சத்துடனும் பயத்துடனும் அல்லாஹ்வை அழைப்பவர்களாகவும் இருக்கின்றனர்'' (21:90).
- பிரார்த்திப்பது இறை வணக்கமாகும் (திர்மிதி).
- மு∴மினின் ஆயுதம் பிரார்த்தனையாகும் (ஹாகிம்)
- பிரார்த்தனையை விட அல்லாஹ்வுக்கு விருப்பமான செயல் எதுவுமில்லை (அஹ்மத்).
- அல்லாஹ்விடம் அவனது அருளைக் கேளுங்கள். அவனிடம் கேட்பதையே அவன் விரும்புகிறான் (திர்மிதி).
- யார் அல்லாஹ்விடம் கேட்கவில்லையோ அவன் மீது அல்லாஹ் கோபப்படுகின்றான் (அஹ்மத்).
- பிரார்த்தனை மனித உள்ளத்தில் இருக்கும் பெருமை மற்றும் மமதையை நீக்கும். அல்லாஹ் ஒருவனே சகலவற்றையும் நிறைவேற்றுபவன் என்ற உயர் விசுவாசத்தையும், பணிவையும் ஏற்படுத்தும்.
- பிரார்த்தனை உள்ளத்திற்கு நிம்மதியைத் தரும்; கவலைகளை அகற்றும்; காரியங்களை இலகுபடுத்தும்; மனச் சுமைகளை நீக்கும்.
- கஷ்டங்களும் துன்பங்களும் நிறைந்த காலங்களில் ஓர் அடியானது பிரார்த்தனை களுக்குப் பதில் கிடைக்க வேண்டுமென்றால் அவன் நிம்மதியாகவும் சுபீட்சமாகவும் இருக்கும் காலங்களில் அதிகமாகப் பிரார்த்திக்கட்டும் (திர்மிதி)

- நிச்சயமாக அல்லாஹ் மிகவும் வெட்கமுடையவன்; தாராளத் தன்மை கொண்டவன். தனது அடியான் உயர்த்திய கரங்களை வெறும் கைகளாக திருப்பி அனுப்புவதற்கு அவன் மிகவும் வெட்கப்படுகிறான்" (திர்மிதி).

எமது பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். அவற்றுக்குப் பதில் கிடைக்க வேண்டும். அதன் மூலம் நமக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்றெல்லாம் நாம் எதிர்பார்க்கின்றோம். அப்படியாயின் பின்வரும் ஒழுங்கு விதிகளை நாம் பேணி நடக்க வேண்டும்.

## பிரார்த்தனைக்கான நிபந்தனைகள்

- அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்தித்தல்.
- உறுதியான நம்பிக்கையுடன் பிரார்த்தித்தல்.
- உணவு, உடை, பானம் என்பன ஹலாலானவையாக இருத்தல்.
- அல்லாஹ்வைப் புகழ்ந்து முஹம்மத் நபி ﷺ மீது ஸலவாத்துச் சொல்லி பிரார்த்தனையை ஆரம்பித்தல்.
- **பிரார்த்தனைக்கான ஒழுங்குகள்**
- அல்லாஹ்வை அவனுடைய அழகிய திருநாமங்களால் அழைத்துப் பிரார்த்தித்தல்.
- மன்றாடி உள்ளச்சத்துடன் பிரார்த்தித்தல்.
- மிஸ்வாக் செய்து வுழூவுடன் பிரார்த்தித்தல்.
- கிப்லாவை முன்னோக்குதல்.
- இரு கைகளையும் உயர்த்துதல்.
- குரலைத் தாழ்த்துதல்.
- மூன்று முறை பிரார்த்தித்தல்
- பிரார்த்திக்க முன் நற்செயலொன்றைப் புரிதல்

## பிரார்த்திப்பதற்கான சிறந்த சந்தர்ப்பங்கள்

- ஐங்காலத் தொழுகையின் பின்
- இரவின் பிற்பகுதி
- வுழூச் செய்த பின்
- அதானுக்கும் இகாமத்துக்கும் இடையில்
- ஸுஜூதில் இருக்கும்போது (அறபியில்)
- மழை பொழியும்போது

- ஜுமுஆ நாளில்
- நோன்பு துறக்கும்போது
- லைலதுல் கத்ர் இரவில்
- அரபா நாளில்
- ஸம் ஸம் நீர் அருந்துகையில்

முஹம்மத் நபி ﷺ அவர்கள் செய்த பிரார்த்தனைகளைக் கற்றுக் கொள்வோம். பிரார்த்தனையின் ஒழுங்குகளைப் பேணி, எல்லா நிலையிலும் மனம் உருகி அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம். அல்லாஹ் எமது தேவைகளை நிறைவேற்றவும், கஷ்டங்களைப் போக்கவும் தயாராக இருக்கின்றான்.

**பயிற்சி:**

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. இறைவா, நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக என்பது
   அ) ஒரு வசனத் தொடராகும். ஆ) ஒரு பிரார்த்தனையாகும்.
   இ) ஒரு வேண்டுகோளாகும்.
2. யார் அல்லாஹ்விடம் கேட்கவில்லையோ அவன்மீது அல்லாஹ் கோபப்படுகின்றான் என்பது
   அ) அல்குர்ஆனின் கூற்றாகும். ஆ) ஒரு ஹதீஸாகும்.
   இ) ஒரு பெரியாரின் கருத்தாகும்.
3. துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமாயின் துஆக் கேட்பவர்
   அ) தூய்மையானவராக இருக்க வேண்டும்.
   ஆ) ஹலாலானவற்றை உண்பவராக இருக்க வேண்டும்.
   இ) வயோதிபராக இருக்க வேண்டும்.
4. துஆ ஒப்புக்கொள்ளப்படும் சந்தர்ப்பம் அல்லாதது
   அ) அதானுக்கும் இகாமத்துக்கும் இடையில்
   ஆ) பர்ளான தொழுகைக்குப் பின்
   இ) தூங்கி விழித்தவுடன்
5. பிரார்த்திக்கும்போது
   அ) குரலை தாழ்த்திக் கொள்ள வேண்டும்
   ஆ) குரலை உயர்த்திக் கொள்ள வேண்டும்.
   இ) மனதால் மட்டும் கேட்க வேண்டும்.